ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ECHOES
இந்தியா
செய்திமடல்

# மாஸ்டரது செய்திகள்

## ஹைதராபாத்: மார்ச் 6 - 9

மரியாதைக்குரிய கம்லேஷ் பாய், ஹைதராபாத் வரப்போகும் செய்தியை, அவரது ஹைதராபாத் பயணத்திற்கு சில மணி நேரங்களுக்கு முன்புதான், உள்ளூர் அப்யாசிகள் கிடைக்கப்பெற்றனர். அவர் நேராக தும்குன்டா மண்டல ஆசிரமத்திற்குச் சென்று சத்சங்கம் நடத்தினார். பிறகு தனது உரையின்பொழுது, "நமது அன்பிற்குரிய மாஸ்டரது *மகாசமாதி*க்குப் பிறகு, இது தான் என்னுடைய முதல் வருகையாதலால், இது எனக்கு முக்கியமானதாகும். இந்தியாவில் உள்ள முதல் மையத்திற்கான வருகை என்பது, எப்போதும் என் நினைவில் இருக்கும் " என்றார். மாஸ்டரை சரீர மட்டத்தில் சந்திப்பது முக்கியம் அல்ல, இதயத்தின் மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதுதான் மிகவும் முக்கியமாகும் என்பதை வலியுறுத்தினார்.

மார்ச் 7 அன்று, கம்லேஷ் பாய் அவர்கள், BHEL ஆசிரமத்தின் தியான மண்டபத்தைத் துவக்கி வைத்து, இரண்டு சத்சங்கங்கள் நடத்தினார். மூன்று 'ஆலோசனைகளையும்' பிரார்த்தனை மனோபாவத்திலிருந்து செய்யும் பொழுது அவற்றின் செயல்திறனையும், பயிற்சியைத் தவறாமல் செய்வதன் தேவையையும் குறிப்பிட்டார். பின்னர், அன்பிற்குரிய சாரிஜியின் நேசத்திற்குரிய செயல்திட்டங்களுள் ஒன்றான, கன்ஹாவிற்குச் செல்லத் தீர்மானித்தார்.

மார்ச் 8 அன்று, தும்குன்டாவில் அவர் சத்சங்கம் நடத்தினார். தனது உரையில், அன்பை ஏற்றுக்கொள்வதன் மூலம், குறைபாடுகள் உள்ள இவ்வுலகத்திலிருந்து, நம் இதயங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று கூறினார். அன்றைய தினம் நடந்த பிரிசெப்டர்கள் கூட்டத்தில், அவர்களின் பணி மற்றும் புதிய முறைகள் பற்றிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தினார். மாலை சத்சங்கத்திற்குப் பிறகு, அவர் கன்ஹாவிற்குத் திரும்பினார்.

மார்ச் 9 அன்று, கம்லேஷ் பாய் அவர்கள் கன்ஹாவில் சத்சங்கம் நடத்திய பின், அன்று மாலை சென்னை திரும்பினார்.





## மகாராஷ்டிரா சுற்றுப்பயணம்

### மும்பை: மார்ச் 13 - 15

மார்ச் 13 வெள்ளிக்கிழமை அன்று, கம்லேஷ் பாய் அவர்கள் மும்பை வந்து, அங்கிருந்து பட்லபூர் சென்று, அங்குள்ள புதிய ஆசிரமத்திற்கான இடத்தைப் பார்வையிட்டார். அங்கு அவர் சத்சங்கம் நடத்திய பின், அந்த இடத்தின் மேம்பாட்டிற்கான அறிவுரைகளை, தலைமைக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கினார். பன்வேல் ஆசிரமத்திற்குப் புறப்பட்டுச் செல்லும்முன் அங்கு அவர் ஒரு மரக்கன்றினை நட்டார்.

மும்பையில் அவர் சத்சங்கங்கள் நடத்தி, பிரிசெப்டர்களைச் சந்தித்து, அப்யாசிகளிடத்தில் உரையாற்றினார். ஆன்மீகம் மற்றும் லௌகீகத்திற்கு இடையேயான சமநிலை உணர்வினை, ஒருவர் தனது வாழ்க்கையில் பேணிக்காக்க வேண்டும். அதாவது ஆன்மீகப் பாதையில் எளிதாகச் செல்வதை அனுமதிக்கின்ற வகையில் தனது லௌகீக வாழ்க்கையை ஒருவர் சீராக வைத்திருக்க வேண்டும் என்று கூறினார்.

மார்ச் 14 சனிக்கிழமை அன்று, சத்சங்கத்திற்குப் பிறகு, கம்லேஷ் பாய் அவர்கள் தனது சொந்த அனுபவங்கள் குறித்துப் பேசுகையில், வேதனை என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் துன்பம் என்பது நமது விருப்பத் தெரிவாகத்தான் இருக்க முடியும் என்றும், தானும் வேதனை அனுபவித்திருப்பதாகவும், ஆனால் துன்பப்பட்டதில்லை என்றும் குறிப்பிட்டார். ஞாயிறு காலை, புனே, அகமத் நகர், சூரத், சோலாபூர், சிக்லி, ஔரங்காபாத், நாசிக் மற்றும் மும்பையின் பெரும்பாலான மையங்களிலிருந்து திரண்டு வந்திருந்த அப்யாசிகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

மும்பையில் உள்ள பிரிசெப்டர்களிடத்தில் அவர் உரையாற்றினார். உரைக்குப் பிறகு, ஒரு வினாடி-வினா நிகழ்வு நடைபெற்றது. கலந்துரையாடலில் இருந்து சில பகுதிகள்:

- பாபூஜி மகராஜ் கூறியுள்ளபடி, பரம்பொருளுடன் ஒன்றிய

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்





பிறகே, உண்மையான ஆன்மீகப் பயணம், ஆரம்பமாகிறது. இது, திருமணத்திற்கு பிறகே உண்மையான வாழ்க்கை தொடங்குகிறது என்பதைப் போலாகும்.

- தியானத்தின் போது எழும் எண்ணங்களை எவ்விதம் கையாள்வது என்ற வினாவிற்கு பதிலளிக்கையில், எண்ணங்கள் எழுவது இயற்கையே, எண்ணங்கள் அற்ற நிலையை அடைவது நமது குறிக்கோளல்ல, ஆனால் நாம், தெய்வீக ஒளி பற்றிய எண்ணத்தை நம்முடன் எப்போதும் வைத்துக் கொண்டால், மற்ற எண்ணங்களைப் பொருட்படுத்தாமல் நம்மால் தியானம் செய்ய முடியுமென்று அவர் கூறினார்.

ஞாயிறு சத்சங்கத்திற்கு பின், மதிய உணவை முன்னதாகவே முடித்துக்கொண்டு, அவர் நாசிக்கிற்கு புறப்பட்டுச்சென்றார்.

## மத்திய மகராஷ்ட்ரா: 15-19 மார்ச்

கம்லேஷ் பாய் தரை மார்க்கமாக பயணம் செய்து, பிற்பகலில் **நாசிக்** வந்தடைந்தார். அங்கு அவர் நடத்திய சத்சங்கத்தில், சுமார் 300 அப்யாசிகள் கலந்து கொண்டனர். மாலை, ஆசிரம நிலத்தில் உள்ள தற்காலிக தியான மண்டபத்தை திறந்து வைத்தார். அங்கு குழுமியிருந்த இளைஞர்களுடன் அவர், புது அப்யாசிகள், தொலைக்காட்சி பார்ப்பதில் நேரத்தை வீணாக்குவது, தற்கால நாகரிக குடும்ப வாழ்க்கை முறை, நம்மை எவ்வாறு மேம்படுத்திக் கொள்வது என்பவை பற்றி ஒரு மணி நேரம் உரையாடினார்.

16ம் தேதி காலை சத்சங்கம் மற்றும் காலை உணவிற்கு பின் அவர் ஔரங்காபாத்திற்கு புறப்பட்டுச்சென்றார். போகும் வழியில், **எயோலா** என்ற கிளை மையத்தில் சத்சங்கம் நடத்தினார். 12 புது அப்யாசிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். மதிய உணவிற்குப்பின் அவர் தன் பயணத்தை தொடர்ந்தார். மாலை சுமார் 3 மணி அளவில் அவர் **லசூர்** மையத்தை வந்தடைந்தார். தியான மையம் கட்டுவதற்காக வாங்கப்பட்டிருந்த நிலத்தில் ஒரு மரத்தடியில் அவர் சத்சங்கம் நடத்தினார். அதில் சுமார் 50 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் அது நினைவில் நிலைத்திருக்கும் தருணமாக அமைந்தது.

17ம் தேதி செவ்வாயன்று அவர், ஔரங்காபாத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 'தியானத்தை அனுபவியுங்கள்' என்ற பொருளில் உரையாற்றினார். மாணவர்கள் ஆசிரியர்கள், மற்றும் அழைக்கப்பட்டிருந்தவர்கள் உட்பட சுமார் 200 பேர் பங்கேற்றனர். அவரின் உரையில் புத்தக அறிவை விட அனுபவ அறிவு மேலானது என்பதை வலியுறுத்தினார். சகஜ மார்க்கத்தில் தியானத்தின் தன்மை பற்றியும், பிராணாஹுதி அதற்கு அளிக்கும் ஆழ்ந்த ஆதரவு பற்றியும் விவரித்தார். ஓய்வெடுக்கும் நுணுக்கத்தை (Relaxation Technic) அவர் செய்து காட்டினார். அனுபவம் பெற விரும்பியவர்களுக்கு தியான அமர்வை நடத்தினார். அநேகமாக அனைவரும் பங்கேற்க விரும்பினர். நிகழ்ச்சியின் முடிவில், 40க்கும் மேலான மாணவர்கள் பயிற்சியை மேற்கொள்ள ஆர்வம் காட்டினர்.

அதன் பின் கம்லேஷ் பாய், **சிகலி** சென்று மாலை சத்சங்கம் நடத்தினார். அதில் 22 புது அப்யாசிகள் உட்பட 250 பேர் கலந்து கொண்டனர். சத்சங்கத்திற்கு பின் அவர் ஹிந்தியில் 35 நிமிடங்கள் உரையாற்றினார். அப்யாசிகளுடன் சேர்ந்து இரவு உணவு அருந்தி, அனைவருக்கும் பிரத்தியேகமாக பிரசாதம் வழங்கினார்.

18ம் தேதி காலை சத்சங்கத்திற்கு பின் **ஜால்னா** சென்றடைந்து, சத்சங்கம் நடத்தினார். அமையப்போகும் தியான மையத்திற்காக ஒரு அப்யாசியால் நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தை பார்வையிட்டார்.

ஔரங்காபாத்திற்குத் திரும்பியதும் அவர், ஆசிரமத்தில் மாலை சத்சங்கம் நடத்தினார். அப்யாசிகள் தங்களிடம்











மாறுதலைக் கொண்டுவரவேண்டும் என்று ஊக்குவித்து, ஹிந்தியில் உரையாற்றினார். அங்கிருந்த போது, தாமும் அவர்களில் ஒருவர் என்று அப்யாசிகள் உணரும்படி அவர் இருந்தார்.

மார்ச்19 அன்று அவர், **அஹமத்நகர்** மையத்திற்குப் புறப்பட்டார். அங்கே, 'ஓம் கார்டன் மங்கள் காரியாலய்' என்னுமிடத்தில் காலை சத்சங்கம் நடத்திய பின்னர், ஒரு நீண்ட நாளைய அப்யாசியின் இல்லத்திற்குச் சென்றார். ஔரங்காபாத்திற்குத் திரும்புவதற்கு பதிலாகத் தமது பயணத் திட்டத்தை மாற்றி, புனேவிற்குச் செல்ல நிச்சயித்தார்.

## புனே: மார்ச் 19-22

தமது சிறிய குழுவுடன் புனேவிற்கு மாலையில் வந்து சேர்ந்த சகோ.கம்லேஷ், ஒரு அப்யாசியின் இல்லத்தில் சத்சங்கம் நடத்தினார். 20ம் தேதியன்று பன்ஷேட் ரிட்ரீட் மையத்திற்குச் சென்ற அவர், அங்கிருந்த வரை, காலை மற்றும் மாலை சத்சங்கங்களை நடத்தினார். அவர் 15 ப்ரிபெட்டுகளை தயார் செய்ததுடன், அப்யாசிகளுக்காக பல உரைகளும் ஆற்றினார். அவ்வுரைகளில் ஒன்றில் அவர், "வாழ்க்கையில் எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் நமது இதயங்களிலிருந்து அன்பு ஊர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அது நதியைப் போல இருக்கவேண்டுமேயொழிய தேங்கியிருக்கும் நீரைப் போல அல்ல" என்று கூறினார். இன்னொரு உரையில் அவர், "இதயம் எப்பொழுதும் உங்களுக்கு உண்மையைக் கூறி சரியான வழியைக் காட்டும். பேராசையும், நான் என்னும் முனைப்பும் குறுக்கே வந்து நம்மைத் தவறான வழியில் செலுத்தும். இதயத்தை பின்தொடர ஒருவருக்கு தைரியம் வேண்டும். எப்பொழுதும் உங்கள் இதயம் காட்டும் வழியிலேயே செல்லுங்கள்" என்று கூறினார்.

காட்டேஜில் இருந்த போது, அவரது நேரம் புதிய அப்யாசிகளை சந்திப்பது, ஏற்கனவே உள்ள அப்யாசிகளுடன் கலந்துரையாடி மகிழ்வது, மற்றும் ஓயாத உழைப்பிலும் கழிந்தது. ஒவ்வொரு நாள் மாலையும் அவர் கடக்வாஸலா அணையின் கரை வரையான ரம்மியமான நடையை அனுபவித்து, அங்கே அமைதியாக சிறிது நேரம் அமர்வார். அப்யாசிகள் மற்றும் சிறுவர்கள் அனைவரையும், தமது வெளிப்படையான தன்மை மற்றும் ஒவ்வொருவரிடமும் காட்டிய அன்பின் மூலம் மகிழ்வித்தார்.

## ஆந்திரக் கடலோரப்பகுதிகளின் பயணம்

**2-12 ஏப்ரல்**

மதிப்பிற்குரிய சகோ.கம்லேஷ், 2ம் தேதியன்று காலை 6.30 மணிக்குத் தயாராகி, தியானத்தில் அமர்ந்தார். அவர் கடலோர ஆந்திரப்பிரதேசத்தின் பல மையங்களைப் பார்வையிடப்போகும் இப்புதிய பயணத்திற்காக, மாஸ்டர்களிடம் பிரார்த்தனை செய்தார். சாரிஜி, இம்மையங்களுக்கெல்லாம் மறுபடியும் வருகை புரிய எண்ணியிருந்த போதும், பல்வேறு காரணங்களால் அது நடைபெறவில்லை என்று கூறினார்.

அவர் காலை சுமார் 9 மணிக்கு **சூளூர்பேட்**டையை அடைந்து, அங்கே குழுமியிருந்த 120 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். ஒரு சிறிய உரையாற்றிய பிறகு அவர் **நெல்லூரு**க்குக் கிளம்பினார். மறு நாள் அவர் நெல்லூரிலிருந்து சுமார் 15கி.மீ. தொலைவிலுள்ள **மண்ணவாரப்பாடு** என்னுமிடத்தில் 'சுலோசனா ஸதன்' என்னும் புதிய ஆசிரமத்தின் திறப்பு விழாவை நடத்தினார். உரையளித்த போது அவர், சம்ஸ்காரமும், நான் என்னும் முனைப்பும் இரு வேறு பொருள்கள் என்று விளக்கினார். நான் என்னும் முனைப்புக்கும், சம்ஸ்காரங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. நாம் வேண்டுமென்றே, "இதை செய்ய மாட்டேன்" அல்லது "எனது துணைவரை சரியாக நடத்த மாட்டேன்" என்று விடாப்பிடியாக இருந்தால் அது குழப்பத்தையும் ஒழுங்கற்ற நிலையையும் ஏற்படுத்தி மேலும் சம்ஸ்காரங்களை ஏற்படுத்தும். நான் என்னும் முனைப்பு சம்ஸ்காரங்களால் ஏற்படாது. ஆனால் நான் என்னும் முனைப்பினால் சம்ஸ்காரங்கள் அதிகமாகும்" என்று கூறினார்.

பயணத்தைத் தொடர்ந்த அவர் **காவாலி** ஆசிரமத்திற்கு





வருகை புரிந்த பின்னர், 4ம் தேதியிலிலிருந்து 6ம் தேதி வரை **ஒங்கோலில்** தங்கினார். இவ்விடங்களில், அந்த மையம் மற்றும் அருகிலுள்ள மையங்களின் அப்யாசிகள், தங்கள் மாஸ்டருடன் இருப்பதற்காக அதிக அளவில் ஒன்று கூடியிருந்தனர். மாஸ்டர் சத்சங்கங்கள் நிகழ்த்தி, அப்யாசிகளுடனும், குழந்தைகளுடனும் நேரம் கழித்தார். 6ம் தேதி, சிலக்கலூரிபேட்டா செல்லும் வழியில், **யனமட்லா** என்ற சிறிய கிராமத்துக்கு வருகைபுரிந்து, சகஜ மார்க்கம் பற்றி நிறைய அறிந்து கொள்ள விரும்பிய 250 உள்ளூர் மக்களுக்கு, வாழ்க்கையின் இலட்சியம் மற்றும் தியானத்தின் அவசியம் பற்றி உரையாற்றினார்.

பின்னர், கமலேஷ் பாய், **சிலக்கலூரிபேட்டா**விற்குப் பயணித்தார். சத்சங்கத்திற்கு பின் ஆசிரமத்தை ஆசிர்வதித்து, அம்மைய குழுவிடம் நிறைய மரங்கள் நடுமாறு ஒரு சிறிய செய்தியை அறிவுரையாகக் கூறினார். காகபுசுந்தி ஆசிரமம் போல் அனைத்து ஆசிரமங்களும் பசுமையாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டும் என்று லாலாஜி விரும்பினார்; மரங்கள் பிராணாஹுதியை தக்க வைத்து கொள்கின்றன, ஆனால் மனிதர்கள் அதைத் தக்க வைத்துக் கொள்ளலாம் அல்லது இழந்தும் விடலாம். ஆகவே நிறைய மரங்கள் வளர்ப்பது, ஆசிரமத்தின் சக்தியைத் தக்கவைக்கும், என்று அவர் கூறினார்.

மதியம் **கோலாகலூர்** ஆசிரமத்தை அடைந்து சத்சங்கம் நிகழ்த்தினார். கடலோரப் பகுதிகளில் நடந்த கூட்டங்களின் சிறப்பான சூழலைத் தொடர்ந்து உணர முடிந்தது. மதியம் ஒய்வெடுக்கும் போது, குரு பரம்பரையினர் இந்த பயணத்தை பின் தொடர்கிறார்கள் என்றும், அவர்கள் உலகின் அனைத்து இடங்களின் மீதும் சிறப்பான பணி புரிந்து வருகிறார்கள் என்றும் அவர் கூறினார். மனித இன நலனிற்கும், உயிரோட்டத்திற்கும் ஆன்மீக வெளிப்பாடு இன்றியமையாதது.

ஏப்ரல் 7 ம் நாள், காலை 8.30 மணிக்கு கமலேஷ் பாய் **குண்டூர்** ஆசிரமத்திற்கு வந்தார். அவரை வரவேற்க, சுமார் 400 அப்யாசிகள் கூடியிருந்தனர். சத்சங்கத்திற்கு பின், வளாகத்தை ஆர்வத்துடன் பார்வையிட்டார். அவருடைய வருகையின் நினைவாக, மூன்று மாமர கன்றுகளை நட்டு வைத்தார். காலை 10.30 மணிக்கு விஜயவாடாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

விஜயவாடா செல்லும் வழியில், KL பல்கலைக் கழகத்தில், விஜயவாடா குழுவினர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புக் கூட்டத்தில், கமலேஷ் பாய் கலந்து கொண்டார். வாழ்க்கையில் தியானத்தின் அவசியம் பற்றி ஆற்றிய சிறிய அறிமுக உரையை, ஏறத்தாழ 300 மாணவர்களும், ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கேட்டனர். உற்சாக உரைக்கு பின், அவர், ஆசுவாச அமர்வை (relaxation session) நடத்தினார். சிறிது நேரத்திலேயே பங்கேற்ற அனைவரும் ஆழ்ந்த நிலையில் மூழ்கினர். பின்னர் அனைத்து மாணவர்களுக்கும் முதல் சிட்டிங் அளித்ததுடன், அடுத்தடுத்த நாட்களில், தொலைதூர சிட்டிங் மூலம் அறிமுக சிட்டிங்குகளை நிறைவு செய்தார்.

**விஜயவாடா** ஆசிரமத்தில், ஏறத்தாழ 40 குழந்தைகளுடைய நெஞ்சங்களிலிருந்து வெளிப்பட்ட அன்பான பாடலுடன், அவருக்கு இதயபூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது. சத்சங்கத்திற்கு பின், ஆசிரமத்திற்கு அருகிலுள்ள SMSF கட்டிடத்தை பார்வையிட்டார். நகரத்தின் மையத்தில், மிகுந்த மதிப்புள்ள இடத்தை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு, உள்ளார்ந்த அறிவுரைகளை அவர் மையப்பொறுப்பாளருக்கு வழங்கினார். ஆசிரமத்தை முதல்தர அடையாளமாக்குவதற்கு, இரண்டு பிரம்மாண்டமான கோபுரங்களைக் கட்டும்படி பரிந்துரைத்தார். மாலையில், அவரது குடிலில், கலந்துரையாடல்கள் இருந்தன. விருப்பங்களுக்கும், ஆசைகளுக்கும் உள்ள வேறுபாட்டை அவர் விளக்கியதுடன், சகஜ மார்க்க பிரார்த்தனையில், 'ஆசைகள்' என்று ஏன் கூறப்பட்டுள்ளது என்பதைப் பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும் என்றும் கூறினார்.

8ம் தேதி காலையில், மற்றொரு சத்சங்கம் நிகழ்த்திய பின் ஒரு சிற்றுரையாற்றினார். அதில் புதிய அப்யாசிகளை திறந்த இதயத்துடன் வரவேற்பதுடன், அவர்கள் சகஜ மார்க்கத்தை அனுபவிப்பதற்கான சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

அவர் தொடர்ந்து ஏலூர் வழியாக **ராஜமுந்திரி** ஆசிரமம்





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்



சென்றார். அங்கு அவர் மீண்டும் ஒருமுறை, இருக்கும் மரங்களை பாதுகாப்பது பற்றியும், ஆசிரமத்திற்கு அருகில் புதிய மரங்களை நடுவதன் அவசியம் பற்றியும் கூறினார்.

9ம் தேதி மாலை அவர் **காக்கிநாடா** ஆசிரமத்திற்கு செல்வதற்கு முன்பாக, **அமலாபுரம்** மற்றும் **ஏனம்** மையங்களுக்குச் சென்றார். சத்சங்கத்திற்குப் பிறகு அவர் ஆற்றிய உரையில், நமது பயிற்சியில் நிலைத்து இருத்தல் மற்றும் உறுதியான முயற்சி ஆகியவற்றின் தேவை குறித்து வலியுறுத்தினார். "சிறிய முயற்சிகளின் பலன் பெரியதாக இருக்கும். ஆரம்பத்தில் சிறிய முயற்சிகளின் பலன் அதிக அளவில் தெரியவராது. ஆனால் நமது இதயத்தில் உருவாகும் ஒவ்வொரு சிறிய விளைவும் மேலிருந்து வரும் நீர்த்துளிகள் போன்றது. ஒவ்வொரு நிலையும் அதனைப்போன்றதே. நீர்த்துளிகளைப்போன்று அவற்றை ஆவியாகிபோக விடாமல், இதயத்தில் சேகரித்து வைத்து ஒரு கடல் போன்று ஆக்க வேண்டும். என்னுடைய இந்தக் கடல், மாஸ்டரின் கடலுடன் ஒன்றாகும் போது, அது தான் அழகாகும், அற்புதமான அழகாகும்".

கம்லேஷ் பாய் 10 ம் தேதி மதியம் புறப்பட்டு விசாகப்பட்டினத்தில் இருந்து 40 கி.மீ தொலைவில் உள்ள **சம்பதிபுரம்** ஆசிரமம் சென்றடைந்தார். மாலை வரை அவர் அப்யாசிகளுடன் வெளியில் அமர்ந்து ஹைதராபாத் திட்டம் குறித்து பேசினார். இது சகஜ மார்க்கத்தின் மெக்காவாகப் போவதாக கருத்துத் தெரிவித்தார். பிறகு, விஞ்ஞானமும் ஆன்மீகமும் பற்றிய உரையாடல் இருந்தது. இரவு உணவுக்குப்பின்னர் வெகு நேரம் உள்ளூர் குழுவினருடன் எதிர்கால வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடி, ஆன்மீகம் பற்றிய வினாக்களுக்குப் பதிலும் அளித்தார். அடுத்த நாள் சோம்பேறித்தனம் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் அவர், "நமது செயல்படாத தன்மை கூட சம்ஸ்காரங்களை உருவாக்கும், சில விஷயங்களை நம்மால் செய்ய இயலாமல் இருக்கும் போது, அதைப்பற்றியே எண்ணிக்கொண்டு இருந்தால் அதுவும் சம்ஸ்காரங்களை உருவாக்குகின்றன" எனக்கூறினார்.

12ம் தேதி காலை 7.30 மணி சத்சங்கத்திற்குப்பின்னர் பயணத்தின் நிறைவுரையை ஆற்றினார். அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பயிற்சி செய்வதன் மூலமாக நல்ல தன்மையுடவர்களாக மாறி அந்த சுய மாற்றத்தின் காரணமாக புதியவர்களை ஈர்க்கவேண்டும் என ஊக்கமளித்தார். பிறகு பிரசெப்டர்களுடனும் அப்யாசிகளுடனும் உரையாடி, அனைவரும் மிஷனின் வளர்ச்சிக்கு உற்சாகத்துடன் பங்கு பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். பிற்பகல் தன்னார்வத் தொண்டர்களுடன் மதிய உணவு உட்கொண்டபின், அவர்களுடன் ஒரு மணி நேரம் பேசினார்.

இப்பயணம் நிறைவடைந்த போது, நடைபெற்ற கூட்டங்கள், அப்யாசிகளின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக விழாக்களில் பங்கு கொள்ளும் அணுகுமுறை ஆகியவை, தன்னை மிகவும் ஈர்த்ததாகவும், அது குறித்து தான் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும் அவர் கூறினார்.

### ஹைதராபாத் : 13 ஏப்ரல்

கம்லேஷ் பாய் காலை சுமார்10 மணிக்கு ஹைதராபாத் சென்றடைந்தார். பின்னர் டோமல்குடா யோகாசிரமம் சென்றார். அங்கு 2000க்கும் அதிகமான அப்யாசிகள் அவருக்காக காத்திருந்தனர். சத்சங்கத்துக்குப் பின்னர், 2015 மார்ச் 31, தேதியிட்ட மென்குரல் செய்தியினை மேற்கோள் காட்டி, ஒரு சிறிய உரை நிகழ்த்தினார். அதில் கன்ஹா சாந்தி வனம் திட்டம், ஒரு 'ஆன்மீக சரணாலயமாக' ஆகும் என்று பாபூஜி மகராஜ் கூறுகிறார். அப்யாசிகள் இயன்றவரை அதில் ஈடுபட்டு, 50000 மரங்களுக்கும் மேல் இருக்கும் உண்மையான வனமாக ஆக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், இப்பணிக்குக் குறைந்தது 2000 தன்னார்வத் தொண்டர்களாவது வேண்டும் என்றும் கூறினார். கன்ஹாவில் சில மணி நேரம் இருந்து விட்டு, மாலையில் டெல்லிக்குப் பயணமானார்.

### வட இந்திய பயணம்: ஏப்ரல் 14 - 20

14 ம் தேதி கம்லேஷ் பாய் குர்காவ் ஆசிரமத்தில் சத்சங்கங்கள் நடத்தினார். மாலை தியானத்திற்குப் பின்னர் உரையாற்றினார்.

15ம் தேதி அதிகாலை டெல்லியில் இருந்து புறப்பட்டு **லக்னொ** அமௌசி விமான நிலையம் வந்து சேர்ந்தார். அங்கிருந்து ஆசிரமத்திற்கு நேரடியாக சென்றார். காலை உணவுக்குப்பின்னர் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு, பாபூஜி மகராஜ் பிறந்த நாள் விழா நடைபெற இருக்கும் இடத்தின் வரை படத்தினை ஆய்வு செய்து, விழா மேலும் சிறப்பாக நடக்க ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் காரில் விழா வளாகம் முழுவதையும் சுற்றி வந்தார். தியான மண்டபத்தில் சத்சங்கம் நடத்தி அப்யாசிகளுக்கு ஒரு சிற்றுரையாற்றினார்.

16ம் தேதி **ஷாஜஹான்பூர்** ஆசிரமத்திற்கு புறப்பட்டு அங்கு காலை 9.00 மணிக்கு சென்றடைந்தார். அன்பும் உற்சாகமும் நிரம்பிய சில அப்யாசிகள் சாலை ஓரத்தில் அவரை வரவேற்க மாலைகளுடனும், அன்பான இதயங்களுடனும் காத்திருந்தனர். ஆசிரமம் வந்தவுடன் பாபூஜி மகராஜின் *மகாசமாதி மண்டப*த்திற்குச் சென்று பூக்களை சமர்ப்பித்தார். 5 நிமிட நேர குறுகிய தியானத்திற்குப் பின், தியான மண்டபத்திற்குச் சென்று சத்சங்கம் நடத்தினார்.

அதன் பின்னர், அவர் ஆசிரமத்தை சுற்றி வந்து, குறிப்பாக, புதிய சமையலறை மற்றும் உணவுக்கூடத்தையும் பார்வையிட்டார். செய்யவிருக்கின்ற சீரமைத்தல் மற்றும் புதிய கட்டுமானப் பணிகளுக்காகப் பல மேம்பாட்டு ஆலோசனைகளை வழங்கினார். தன்னுடைய மின்னஞ்சல்களை பார்வையிட்ட பின், நிர்வாக விஷயங்கள் குறித்தும் கலந்துரையாடினார். மாலை சத்சங்கத்திற்குப்பின், ஷாஜஹான்பூரிலுள்ள, அன்பும், பக்தியும் நிறைந்த ஒரு அப்யாசியின் வீட்டிற்கும் சென்றார்.





அவருடைய ஒரு உரையில், "நமது முன்னேற்றமானது, நிச்சயமாக நமது நடத்தையில் பிரதிபலிக்கும் வகையில், நாம் நம் பயிற்சியை செய்ய வேண்டுமென, லாலாஜி கூறுவது வழக்கம். "ஆமாம், அவர் ஒரு சகஜ மார்க்க அப்யாசி" என்று மற்றவர்கள் கூற வேண்டும். நாம் அவருடைய நினைவில் மூழ்கி இருந்து, மாலை சுத்திகரிப்பிற்கான தேவை நமக்குள் எழாத வகையில், நம் வாழ்க்கையை வாழ வேண்டும். அதுதான் இறுதியான சாதனையாகும்." என்று கூறினார்.

கமலேஷ் பாய், ஷாஜஹான்பூரிலிருந்த பொழுது, கடலோர ஆந்திர பகுதியின் பணியிலும் ஈடுபட்டு, மிகப் பெரிய அளவில் கூடியிருந்த கிராம மக்களுக்கு, தொலைதூர அறிமுக தியானங்கள் வழங்கினார்.

17 தேதியன்று அவர் தியான கூடத்தில் சத்சங்கம் வழங்கினார். காலை சிற்றுண்டிக்குப் பிறகு பாபூஜி மகராஜின் வீட்டிற்கு சென்றார். பாபூஜி எந்த அறையில் வாழ்ந்து, பணி புரிந்தாரோ, அதே அறையில் சத்சங்கம் நடத்தினார்.

ஷாஜஹான்பூரிலிருந்து காலை 9.30 மணிக்கு **ஃபதேகருக்கு** புறப்பட்டார். ஆசிரமத்திற்கு வந்தவுடன் சத்சங்கம் வழங்கினார். ஆசிரம வளாகத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை முன்மொழிந்தார். தம் உரையில் அவர், "அவருடைய போதனைகளை மக்களுக்கு கொண்டு செல்வதே நாம் அளிக்கும் குருதட்சிணை ஆகும். புதிய அப்யாசிகள் பயிற்சியை தொடர்வதும், தொடராமல் இருப்பதும் அவர்களுடைய விருப்பம். ஆனால், அவர்கள் சகஜ மார்க்க தியானத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் எப்பொழுது வர விரும்புகி றார்களோ, அப்பொழுது நம் கதவுகள் திறந்தி ருக்கும் என்ற உறுதியை நாம் அவர்களுக்கு அளிக்க வேண்டும். அவர்களை விமர்சிக்காதீர்கள். சகஜ மார்க்கம் அன்பின் பாதையாகும்." என்று கூறினார்.

தங்களின் அன்புக்குரிய மாஸ்டர் இரவு உணவை அனைவருக்கும் வழங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த அப்யாசிகள் அனைவரும், அன்பிலும் நன்றியுணர்விலும் ஆழ்ந்திருந்தனர். அவர் அன்று இரவு ஆசிரமத்தில் தங்க முடிவு செய்தார். ஏப்ரல் 18 ம் தேதி மாலை 6 மணிக்கு, ~ஃபதேகருக்குப் புறப்பட்டார்.

லக்னோ செல்லும் வழியில், ஹர்தோயிலுள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையில் சிறிது நேரம் ஓய்வெடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டது. அங்கு அவர் உள்ளூர் அப்யாசிகளை சந்தித்து, லக்னோ ஆசிரமத்திற்கு செல்வதற்கு முன் சத்சங்கம் வழங்கி னார்.

19ம் தேதி, கம்லேஷ் பாய் அதிகாலையில் எழுந்து, மின்னஞ்சல்களை பார்த்தபின், தியான கூடத்தில் காலை சத்சங்கம் வழங்கினார். சத்சங்கத்திற்குப் பிறகு நிகழ்த்திய உரையில், அதிக கவனம் செலுத்தி பயிற்சி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் ஒழுக்கத்தின் தேவையை வெளிப்படுத்தி, அது அப்யாசிகளின் சொந்த நலனிற்காகத்தான் என்று கூறினார். காட்டேஜில், தன்னார்வத்தொண்டர்களுடன் மதிய உணவு உட்கொண்டார். மாலையில், சத்சங்கம் நடத்த தியானக்கூடத்திற்குச் சென்றார். தன்னுடைய உரையில் "பொருட்களுக்கு ஆசைப்படுவதை நிறுத்திகொள்ளுங்கள், எப்படி இருக்கிறதோ அவ்வாறே ஏற்றுக்கொண்டு, அதனை மகிழ்ச்சியுடன் செய்யுங்கள். துன்பங்களையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு, அவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கசப்பான, கோபமான, கடினமான இதயமானது மாஸ்டரின் கருணையை விலகச் செய்கிறது. அனைத்துச் சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியுடனும், நன்றியுணர்வுடனும் இருப்பவர் தன்னிச்சையாகவே அவரின் கருணையை பெறுகிறார். அப்படி இருப்பவர் வெகு விரைவாக முன்னேறுகிறார்" என்று கூறினார். அனைவரும் மகிழும்படி, இரவு உணவை, உணவுக் கூடத்தில் தன்னர்வத்தொண்டர்களுடன் உண்டார்.

ஏப்ரல் 20ம் தேதி, காலை 9 மணிக்கு ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு, அமௌஸி விமான நிலையத்தில் இருந்து டெல்லி செல்லும் விமானத்தில் பயணித்தார். அங்கிருந்து அகமதாபாத்திற்குத் தம் பயணத்தை தொடர்ந்தார்.



## மணப்பாக்கச் செய்திகள்



**லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐபீரிய தீபகற்பத்தைச் சேர்ந்த அப்யாசிகளுக்கான கருத்தரங்கம்: பிப்ரவரி 9-14:** பிரேசில், சிலி, கொலம்பியா, இக்வாடர், ஃபிரான்ஸ், ஹைதி, மார்டினிக், மெக்சிகோ, மொராக்கோ, போர்ச்சுகல், ஸ்பெயின், அமெரிக்கா மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அப்யாசிகள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

ஒவ்வொரு நாளும், 3 தியானங்களும் 2 நிகழ்ச்சிகளும் இருந்தன. கருத்தரங்கின் பல நிகழ்ச்சிகளில், சுய-பிரதிபலிப்பு, அதைத் தொடர்ந்த சிறு குழுக் கலந்துரையாடல்கள், அதன் பின்னர், பங்கேற்பாளர்கள் தங்களின் சொந்த எண்ணங்களையும், உணர்வுகளையும் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் ஆகியவை இருந்தன. 'மாஸ்டரை உள்ளீர்த்துக்கொண்டு அவருடைய போதனைகளை வெளிப்படுத்துங்கள்' என்ற கருத்தை மையமாகக் கொண்ட ஒரு விளக்கத் தொடர் வழங்கப்பட்டது. லாலாஜி மகராஜ் அவர்களால் அருளப்பட்ட தொடர்புக் கோட்பாடுகளை வலியுறுத்திய நிகழ்ச்சி, பங்கேற்பாளர்களை, அவர்கள் பிறருடன் தொடர்பு கொள்ளும் விதம், பிறரிடம் வெளிப்படுத்தும் மனப்பாங்கு, மற்றும் அதில் கொண்டுவரக்கூடிய மாற்றங்கள் ஆகியன பற்றிய அகத்தாய்வு செய்ய வைத்தது. கருத்தரங்கின் இறுதி நாட்களில், பல அப்யாசிகள் இக்கேள்விகளுக்கான தங்கள் பதில்களை பகிர்ந்துகொண்டு, தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளை சான்றாகக் கொடுத்தனர்.

பிப்ரவரி 13-ம் தேதி, வெள்ளிக்கிழமையன்று, கம்லேஷ்ஜி கருத்தரங்க பங்கேற்பாளர்களுக்கு ஓர் உரையாற்றினார். அவ்வுரையிலிருந்து சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- நம் அறிவு, நம் அனுபவங்களை பின்புலமாகக் கொண்டிருக்க வேண்டும். நம் எண்ணங்கள் மிகுந்த உள்ளாற்றல் வாய்ந்தவை; ஆனால் அவை, இதயப்பூர்வமானதோர் உள்ளுணர்வைப் போல, நம் அனுபவங்களை பின்புலமாகக் கொண்டிருக்க வேண்டும்; அது அப்போது உண்மையிலேயே மெய்மையாகிறது.
- அதிகம் பேசாதீர்கள். நம் வெளிப்புற நடத்தை, நம் அக அழகின் வெளிப்பாடாகும்; அத்தூய்மையானது, அனைத்தையும் சரியாகச் செய்யும்போது செழிப்படைகிறது.
- நம் சுத்திகரிப்பு முறையானது விளைபயன் மிக்கதாகும். நாம் சுத்திகரிக்கும் முறையில் 3 வேறுபாடுகளைக் காணலாம்: (i) ஒரு முடிவெடுக்கும் முன்பு செய்யும் ஒரு சிறு சுத்திகரிப்பு - இதன் மூலம், ஏதேனும் எதிர்மறை விளைவை தவிர்க்கலாம், (ii) ஒருவரை சந்திக்கும் முன்பு செய்யும் குறுகிய சுத்திகரிப்பு - இதன் மூலம் ஒருவருடன் முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கலாம், மற்றும் (iii) ஒரு எதிர்மறை நிகழ்வுக்குப் பின் செய்யப்படும் ஓர் குறுகிய சுத்திகரிப்பு.

### பிரிபெக்ட் தேர்வர் நிகழ்ச்சி

**மார்ச் 6 - 15**

இக்கருத்தரங்கில், 43 சகோதர சகோதரிகள் பங்குபெற்றனர். இதில், பிரிசெப்டர்களின் பணியில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. சகஜ மார்க்க தத்துவம், உள்நிலை அறிதல் மற்றும் 10 நியமங்கள் உள்ளிட்ட தலைப்புகளின் மீது நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கம்லேஷ்ஜி தமது நேரத்தை மிக தாராளமாக செலவிட்டு, தேர்வர்களுக்கு 3 தருணங்களில் உரை நிகழ்த்தினார். அவர், பிரிசெப்டர்கள் தங்கள் பணியில் தாழ்மையுடனும், தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமலும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், பயிற்சியை முனைப்புடன் செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். அவர், ஆடிடோரியத்தின் மாடியில் ப்ரிபெக்ட் தேர்வர்களுடன் இரவு உணவில் சேர்ந்து கொண்டபோது, அவர்கள் ஆனந்தமடைந்தனர்.

புதிய ப்ரெசெப்டர்கள் தங்களது 'புனிதமான, உயர்ந்த' பணியை மேற்கொள்ளத் தயாராகிய போது, இக்கருத்தரங்கம், சகோதரத்துவமும், குறிக்கோளும் கொண்ட உணர்வைத் தோற்றுவித்தது.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்





**"நம் விதியை வடிவமைத்தல்" - அகில இந்திய இளைஞர்கள் கருத்தரங்கு - மார்ச்**

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட, இந்தியா முழுவதிலுமிருந்து வந்திருந்த, 18- 25 வயது வரை உள்ள, சுமார் 450பங்கேற்பாளர்கள், 2 மாதங்களுக்கும் மேலாக, மின்னஞ்சல் மூலம் அனுப்பபட்ட, வாராந்திர செயல்பாடுகள் மூலம், தயாராகி வந்திருந்தனர். கருத்தரங்கு முழுவதும் விவரங்களை அறிவதைக்காட்டிலும் அனுபவங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

"தொலை நோக்குப் பார்வையாளர்களாக மாறுதல்" (Becoming Visionaries) என்ற, சாரிஜியின் வீடியோ உரையுடன் நிகழ்வு தொடங்கியது. சகோதரி எலிசபெத் டென்லீ, முறையான சகஜ மார்க்கப் பயிற்சியின் மூலம், ஆன்மீக நாட்டமுடைய ஒருவர், மற்றவர்களிடம், தொடர்பு கொள்வதிலிருந்து, ஆன்மீகத் தோழமை கொள்பவராகப் பரிணாம வளர்ச்சியடைவது எவ்வாறு என்பதை விவரித்தார். சகஜ மார்க்கப் பயிற்சியை பற்றிய ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாக, பல செயல்பாடுகள் இருந்தன. கம்லேஷ் பாய், தனது பயணத்திலிருந்து திரும்பி வந்த பிறகு, மூன்றாம் நாள் காலையிலும், அதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் சத்சங்கம் நடத்தினார். கூட்டத்தினருக்கு அவர் ஆற்றிய உரைகளில், பெறுமதியான ஆலோசனைகள் பல வழங்கப்பட்டன:

- பிரார்த்தனை செய்வதிலிருந்து, எப்பொழுதும் பிரார்த்தனை நிறைந்த நிலைக்குச் செல்லுங்கள். தியானம் செய்வதிலிருந்து, எப்பொழுதும் தியானத்தில் இருக்கும் நிலைக்குச் செல்லுங்கள்.
- பண்டாராவில் இருக்கும் பொழுது நாம் கிணற்றுக்குள் இறக்கப்பட்ட வாளிகளைப் போல இருக்கிறோம். அது அமிழ்ந்திருக்கும் போது, முழுவதும் நிறைந்ததாகத் தோன்றுகிறது. ஆனால் அதை வெளியே எடுக்கும் போதே தண்ணீர் சிறிது சிந்துகிறது. அதில் துளைகள் இருந்தால், வாளியில் இருக்கும் அனைத்தும், அந்த வாளி மேலே வரும் போது வெளியேறி விடுகிறது. இந்த துளைகள் நம் இதயத்தில் இருக்கும் ஆசைகளைத் தவிர வேறெதுவும் இல்லை.
- ஒரு வெற்றிடமானது, இரண்டு அரைக்கோளங்களைப் பற்றிக் கொண்டதென்றால், அவற்றைப் பிரிப்பது என்பது மிகவும் கடினமான காரியம். மிகச் சிறிய அளவிலான காற்றை நீங்கள் உட்செலுத்தினால், அவை எளிதாக பிரிந்து விடும். வெற்றிடத்தின் ஆற்றல் அத்தன்மையது ஆகும். உங்கள் இதயத்தில் அத்தகையதொரு வெற்றிடத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அது, ஆற்றல் வாய்ந்த, பிரிக்க இயலாத இணைப்பை ஆதிமூலத்துடன் உருவாக்கும். இதயத்தில் உள்ள அந்த வெற்றிடமானது மிகச் சிறிய ஆசையினால் கூட அழிந்து விடும்.
- உங்கள் பெற்றோர்களுக்கு எப்போதும் அன்பும் மரியாதையும் அளியுங்கள். அவர்களுக்கு வேதனை தரும் எதுவும் உகந்தது அல்ல.
- மனதார விரும்பும் ஆசைகள் நமது விதியில் குறுக்கிடுகின்றன. நாம் அதன் போக்கில் குறிக்கிடாவிட்டால், விதியானது தானாகவே விரிகிறது.
- பயிற்சிக்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. பயிற்சியே, நமது அணுகுமுறைக்கு, 5 சதவீதம் காரணமாகிறது. பயிற்சி செய்யவேண்டும் என்ற மனப்பான்மை 95 சதவீதம் காரணமாகிறது. பயிற்சியை கற்றுத்தர முடியும். ஆனால் மனப்பான்மையைக் கற்றுத் தர முடியாது. நாம் தான் அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கம்லேஷ் பாய் கேள்வி பதில் பகுதியையும் நடத்தி, கலகலப்பான விதத்தில் பதில்களை அளித்ததோடு



அல்லாமல், உள்முகமாக வழிகாட்டுதல்களைப் பெறுவதன் அவசியத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டினார். அவர் இந்தக் குழுவைச் சந்தித்ததில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதோடு, அவர்கள் அனைவரும் உயர்ந்த நிலையில் சேவை செய்வதற்குத் தங்களைத் தயார் படுத்திக் கொள்வார்கள் என்ற தனது நம்பிக்கையைத் தெரிவித்து, பின் வரும் அடிப்படை புத்தகங்களைப் படிப்பதற்கும் பரிந்துரைத்தார். அவையாவன: என் மாஸ்டர், மனிதனின் பரிணாம வளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு, உள்ளத்தை வெளிக்காட்டுதல், அன்பும் மரணமும், ராம் சந்த்ராவின் படைப்புகளின் முழுத் தொகுப்பு.

கருத்தரங்கு நிறைவுபெறும்போது, இம்மாதிரியான அனைத்து முடிவுகளிலும் ஏற்படும் சோகம், கட்டுக்கடங்காத மகிழ்ச்சியாலும் புதிய தொடக்கத்தின் உணர்வாலும் மறைந்தது.

## கிழக்கு மாநிலங்கள் பிரிசெப்டர்கள் கருத்தரங்கு

**24 - 28 மார்ச் 2015**



'மாஸ்டரை உள்முகப்படுத்தி அவருடைய படிப்பினைகளை உள்ளத்தில் படிவப்படுத்தி வெளிப்படுத்தவேண்டும்' எனும் தலைப்பில் நடந்த கருத்தரங்கில், மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, ஜார்கண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய இடங்களிலிருந்து, 82 பிரிசெப்டர்கள் மற்றும் மகாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம், தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி 8 உதவியாளர்களைக் கொண்ட குழுவால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற கருத்தரங்கத்திற்கு சாரிஜி மகராஜ் கொடுத்த முக்கிய குறிக்கோள்களான - பிரிசெப்டர்களிடையே உண்மையான சகோதரத்துவத்தை வளர்ப்பது, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு மற்றும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதை ஊக்குவிப்பது - ஆகியவற்றை மேற்கொண்டிருந்தது.

பல்வேறு உரைகள், கலந்துரையாடல்களில் கூறப்பட்ட கருத்துகளில், 'ஒரு விழிப்புணர்வுடைய வாழ்க்கை முறை', 'மேம்படுத்தும் மாற்றமும் விதியும்,' மற்றும் 'செய்தல், செயலில்லாதிருத்தல்' ஆகியவையும் அடங்கும். நிகழ்ச்சியின் ஒவ்வொரு பகுதியும், கம்லேஷ் பாய் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் அறிவித்த புதிய நுட்பங்களில் ஒன்றை எடுத்து செயல்முறைப்படுத்துவதுடன் தொடங்கியது. அனைவருக்கும் 'இதயபூர்வமானதன்மை' (Heartfullness) மனதைத் தளர்த்தும் முறையைப் (relaxation method) பற்றி அறிய வாய்ப்பு கிடைத்தது.

இறுதி நாள் மாலையில், கம்லேஷ் பாய் ஆடிட்டோரியம் மாடியில் இரவு உணவு அளித்தார். அனைத்து பங்கேற்பாளர்களுடனும் உள்ளன்புடன் பேசி, அனைவரின் இதயத்தையும் தொட்டார். பங்கேற்பாளர்கள், இதுபோன்ற மேலும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஆர்வம் காட்டினர்.

## செய்தியைப் பரப்புதல்

யனமடலா, ப்ரகாசம் மாவட்டத்தில், யட்டனப்புடி மண்டலத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். மதிப்பிற்குறிய கம்லேஷ் பாய், ஆந்திரக் கடலோரப் பயணத்தின்போது அங்கு வருகை புரிந்து, ஏப்ரல் 6 அன்று, ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தினார். சகஜ மார்க்கத்தைப் பற்றி அறிய, சுமார் 250 கிராமத்து மக்கள் கூடியிருந்தனர். 'வாழ்வின் குறிக்கோள் மற்றும் தியானத்தின் அவசியம்' பற்றி உரையாற்றினார். சகோதரி உமா கங்காதர் (மையப்பொறுப்பாளர், நெல்லூர்) இதை தெலுங்கில் மொழிபெயர்த்தார். இத்தொகுதியின் MLA வும் இந்த வரவேற்புக்கூட்டத்தில் பங்கேற்றார். அவர் கம்லேஷ் பாயிடம், மர்தூரில் நடக்கும் தொகுதி அளவிலான கூட்டத்தின்போது, இன்னுமொரு வரவேற்புக்கூட்டம் நடத்தும்படி வேண்டினார். நிகழ்ச்சியின் போது, தியானத்தின் அவசியம் குறித்து வந்த சில கேள்விகளுக்கு கம்லேஷ் பாய் பதிலளித்தார்.

ஏப்ரல் 16 அன்று ப்ரகாசம் மாவட்டம் மர்தூர் கிராமத்தில், MLAவின் வேண்டுகோளின்படி, இன்னொரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. 800 பொதுப்பணியாளர்களும், பொதுப்பணியில் இல்லாதவர்களும் கலந்துகொண்டனர். சகோதரி. உமா கங்காதர், சகஜ மார்க்க தியான முறையையும், மனித வாழ்வின் குறிக்கோள் பற்றியும் விவரித்தார். பிறகு Dr வெங்கட் R எடரா தியானத்தின் பயன்களை விளக்கி, அனைவரையும் 10 நிமிடங்கள் தியானத்தில் அமரும்படி சொன்னார். தியானத்திற்குப் பின் அனைவரும் இளைப்பாறிய உணர்வுடன் இருந்தனர். சிலர் சொல்லமுடியாத அமைதியை அனுபவித்ததாகவும் கூறினர். இச்சமயத்தில் கம்லேஷ் பாய் ஷாஜஹான்பூரில் இருந்தார். அங்கிருந்து 800 பேருக்கும், தொலைதூர சிட்டிங் கொடுத்தார். சிட்டிங்கிற்குப் பிறகு உரையாற்றியபோது. அறிமுக சிட்டிங் நிறைவு செய்ய, 17, மற்றும் 18ம் தேதிகளில், இரவு 9 மணிக்கு அமரும்படி அவர்களிடம் சொன்னார். பல தன்னார்வத்தொண்டர்கள், இதை ஏற்பாடு செய்வதில், மும்முரமாக ஈடுபட்டார்கள்.



## U- கனெக்ட் செயல்பாடுகள்

### கஸியாபாத்



மார்ச் 29ம் தேதி, கஸியாபாத், சாந்தி குன்ஜ் ஆசிரமத்தில், ஒரு நாள் U-கனெக்ட் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. ஆக்ரா, மீரட், ஹபூர், குவாலியர், முஸஃபர் நகர், மொரதாபாத், நொய்டா, வைஷாலி, டெல்லி மற்றும் குர்காவ் ஆகிய மையங்களில் இருந்து, 80க்கும் அதிகமானோர் அதில் பங்கேற்றனர்.
கஸியாபாத் மையப்பொறுப்பாளர் சகோ. சுமீத் அரோரா மற்றும் நொய்டாவைச் சேர்ந்த சகோ. ஹர்ப்ரீத் பான் ஆகியோர், U- கனெக்ட் நிகழ்ச்சியின் கருப்பொருள், நோக்கம் மற்றும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தி, பங்கேற்பாளர்களின் வினாக்களுக்கு விளக்கமளித்தனர். தன்னார்வத் தொண்டர்கள், 'அறிமுகப்படுத்துதல்' மற்றும் 'யோகா' ஆகியவை பற்றிய மாதிரி நிகழ்ச்சிகளை நடத்தினர். கருத்தரங்கின் முடிவில், இந்த சுய மேம்பாட்டு நிகழ்ச்சியை, (SDP) பாடத்திட்டத்தில் இணைக்க ஏதுவாக, தங்கள் இடங்களில் உள்ள கல்வி நிறுவனங்களை அணுகுமாறு பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

### கோலாப்பூர்

கோலாப்பூரில், பீமா நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் MBA மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட SDP நிகழ்ச்சி (சுய மேம்பாட்டு நிகழ்ச்சி) மிகவும் வெற்றிகரமாக நிறைவுற்றது. நிறுவனத் தலைவர் நிகழ்ச்சிக்கு மிகுந்த ஊக்கமளித்தார்.

2014 ஆகஸ்ட் முதல், 2015 பிப்ரவரி வரை, மொத்தம் 12 அமர்வுகள் இருந்தன. இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில், ஊக்கத்துடனும், ஈடுபாட்டுடனும், 31 மாணவர்கள் பங்கேற்றனர். சில நிகழ்ச்சிகளில், பீமா கல்விக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் கலந்து கொண்டு, நிகழ்ச்சியின் மூலம் வழங்கப்பட்ட கருத்துரைகளையும், நன்னெறிகளையும் பாராட்டினர்.

சுமார் 27 மாணவர்கள், சிட்டிங்குகள் எடுத்துக் கொண்டு, முறையான தியானப் பயிற்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். கல்லூரி வளாகத்திலேயே குழுத் தியானங்கள் நடத்தப்பட்டன. ஒரு விமரிசையான விழாவில், பங்கேற்பு சான்றிதழ்களை, திரு. A.K. கௌரவ் வழங்கினார். அப்போது, மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, தியான முறை அவர்களுக்கு எவ்வாறு நன்மை அளித்தது என்று விவரித்தனர்.
U- கனெக்ட் நிகழ்ச்சியின் பயன்களை மாணவர்கள் அதிகபட்ச எண்ணிக்கையில் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், ஜூலை 2015 ல், கால அட்டவணையில், இந்நிகழ்ச்சிக்காகத் தனி இடம் ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

### கொல்கத்தா

கொல்கத்தா பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில், (BMA) மார்ச் 14, 15 தேதிகளில், U - கனெக்ட் ஆசிரியர் மேம்பாடு/ அறிமுக பணிமுகாம் ஒன்று, இரு நாட்களுக்கு நடத்தப்பட்டது. பீகார், ஜார்க்கண்ட், அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்திலிருந்து, சுமார் 75 அப்யாசிகள் இதில் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்களுக்கு, U-கனெக்ட் புதிய முயற்சியைப் பற்றிய ஒரு மீள்பார்வை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஒருங்கிணைப்பாளர்கள், வழிநடத்துனர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கு மற்றும் கடமைகள், கல்வி நிலையங்களை அணுகும் முறை, U- கனெக்ட் குழுவால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் ஆகியவை பற்றிய கலந்துரையாடல்கள் இருந்தன. பங்கேற்பாளர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் U-கனெக்ட் பாடத்திட்டத்தின் ஒரு அத்தியாயம் கொடுக்கப்பட்டது., அத்தலைப்பில் அவர்கள் ஒரு மாதிரி நிகழ்ச்சியை நடத்தினர். நிகழ்ச்சியின் முடிவில், அதைப் பற்றிய பின்கருத்துக்கள் பெறப்பட்டு, ஒரு செயல் திட்டமும் வரையறுக்கப்பட்டது.





## ஆந்திரபிரதேசம்- வடக்கு

U- கனெக்ட் செய்தி தொடர்ச்சி...



மார்ச் 14, 15 தேதிகளில் வாரங்கல் ஆசிரமம் அஷ்வபுரம் மையம், மற்றும் மண்டலம் 1A சார்ந்த சத்துபள்ளி மையத்திலும் மாதிரி பயிற்சி நடத்தப்பட்டது. தியானம், நன்னெறி, யோகா, மதம் மற்றும் 'உள்ளார்ந்த வளர்ச்சி புறவளர்ச்சிக்கு வழி வகுக்கிறது' என்ற கருப்பொருளிலும், வழங்கப்பட்ட விளக்கப்பட உரைகளைத் தொடர்ந்து, மாஸ்டரின் வீடியோவும் காண்பிக்கப்பட்டது. இளைஞர்களுடன் உள்ளூர் அப்யாசிகள் மற்றும் ப்ரிசெப்டர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி, அனைத்து இளைஞர்களும் ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளவும், சகஜ மார்க்கத்துடன் இணையவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. மாணவர்கள் உற்சாகத்துடனும், திறந்த மனதுடனும் கலந்து கொண்டனர்.

யூ-கனெக்ட் பணியில் பங்குபெற http://www.sahajmarg.org/resources/programs/uconnect என்ற இணைப்பில் பதிவு செய்து கொள்ளவும்.

## நன்னெறிக் கல்வி





SHPT யால் துவக்கிவைக்கப்பட்ட நன்னெறி கல்வி (VE) திட்டம், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முழு மூச்சில் செயல்பட்டுவருகிறது. பல பள்ளிகள், VE பாடத்திட்டதை, ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பித்த புதிய கல்வியாண்டில், தங்களது கல்வித்திட்டத்துடன் சேர்க்க தேர்வு செய்துள்ளனர்.

VE பாடத்திட்டத்தை, **ரப்ரியவ**ஸில் (ராஜஸ்தான்) உள்ள, அம்புஜா பப்ளிக் ஸ்கூலில் 8, 9ம் வகுப்புகளில், ஏப்ரலில் இருந்து அறிமுகப்படுத்தபட்டது. ஆரம்ப வகுப்புகளுக்குப் பின் மாணவர்கள் நேர்மறையான அணுகுமுறையுடன், உற்சாகத்தையும் காட்டினர்.

VE பாடத்திட்டம், **சிலிகுரி**, புனித மைக்கேல் பள்ளியில், 2015-2016 கல்வியாண்டில் தொடங்கபட்டது. ஏப்ரல் 7 மற்றும் 11 ல், முறையே 9 மற்றும் 8 -ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன. செயலில் கற்றல் மூலம், ஆறு 'முக்கிய நன்னெறிகளை' எவ்வாறு வழங்குவது என்ற யோசனையும் கொடுக்கப்பட்டது. மொத்தத்தில் மாணவர்கள் ஆர்வமாக பங்கேற்ற சுவாரசியமான நிகழ்ச்சியாக இருந்தது.

ஏப்ரல் 7 அன்று, **ஜாபடாபூரின்**, No.2, ரயில்வே காலனியில் உள்ள கேந்திரிய வித்யாலயாவின் ஆசிரியர்களுக்கு, நன்னெறி கல்விதிட்டத்தைப் பற்றிய அறிமுக நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. நன்னெறி வளர்ப்பதன் முக்கியத்தை வலியுறுத்தி, பங்கேற்பாளர்களுக்கு நிகழ்ச்சியைப் பற்றிய ஒரு மீள்பார்வை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில், ஆசிரியர்கள் தன்னார்வத் தொண்டர்களுக்கு வகுப்பு நடத்த உதவி புரிவதாக வாக்குறுதி அளித்தனர்.




உங்கள் பகுதியில் நன்னெறி கல்வி தன்னார்வத் தொண்டராக பங்கேற்க, கீழ்க்கண்ட இணையதளத்தைப் பார்க்கவும்: http://www.sahajmarg.org/resources/programs/values-education

## இளைஞர்களுக்கான செயல்பாடுகள்

### சோழவந்தான், தமிழ்நாடு



ஏப்ரல் 14 அன்று சோழவந்தான், சிவகங்கை, சின்னாளப்பட்டி மற்றும் மதுரை மையங்களின் 30 இளம் அப்யாசிகளுக்காக ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பங்கேற்பாளர்கள், அவரவரது மையங்களில் நடைபெறும், மாஸ்டர், பயிற்சிமுறை, மிஷன் இம்மூன்றையும் நோக்கிய வளர்ச்சிக்கு, அப்யாசிகளை ஊக்குவிக்கும் செயல்பாடுகளைப் பற்றிய தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். நமக்குள் மாற்றத்தை எவ்வாறு கொண்டு வருவது என்பது பற்றிய மாஸ்டர்களின் மேற்கோள்கள், மற்றும் 'சத்யோதயம்' புத்தகம் ஆகியவற்றைப் பற்றிய உயிரோட்டமுள்ள கருத்துரைகள் வழங்கப்பட்டன. இறுதியாக, மிஷனை எதிர்காலத்தில் எவ்வாறு மேலும் மேன்மையடையச்செய்வது என்பதைப்பற்றி இளைஞர்கள் விவாதித்தனர். நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனைவரும், ஆன்மீக புத்துணர்வு பெற்றதாக உணர்ந்தனர்.

### ஹுப்ளி, கர்நாடகா

மார்ச் 13, 14 தேதிகளில், ஹுப்ளி மையத்தில், வடக்கு கர்நாடகாவின் பல்வேறு மையங்களின் 42 இளம் அப்யாசிகளுக்கான, இரண்டு நாள் இளைஞர் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. ஹுப்ளியின் இளைஞர் குழு, பல்வேறு மையங்களுக்குச் சென்று, அங்குள்ள இளைஞர்களைப் பங்கேற்க ஊக்குவித்து, ஒரு மாதத்திற்கும் மேலாக, தீவிரமாகப் பணியாற்றியது. இலட்சியம், ஆன்மீக பயணம், பயிற்சி மற்றும் தன்மைமாற்றம் ஆகியவை பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில், சுய ஆய்விற்கும் சுயவெளிப்பாட்டிற்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. காலை உடற்பயிற்சி, சத்சங்கம், அமைதி நேரம், விளையாட்டுகள் மற்றும் மாலை சுத்திகரிப்பு ஆகியவை அட்டவணையில் இடம் பெற்றிருந்தன.



### கோடை முகாம், கஸியாபாத்

ஏப்ரல் 11, 12 ஆகிய தேதிகளில், சாந்தி கன்ஜ் ஆசிரமத்தில், குழந்தைகளுக்கான கோடை முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கஸியாபாத், நொய்டா மற்றும் வைஷாலி ஆகிய ஆசிரமங்களிலிருந்து பங்கேற்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும், தேவையான பொருட்கள் அளித்து, வரவேற்றனர்.

முகாமின் மையக்கருத்து "*இந்த்ரதனுஷ்*" (வானவில்) என்பதாகும். ஆசிரம வளாகம் எல்லா இடங்களிலும், பல்வேறு வண்ணங்களால் கலைநயத்தோடு அலங்கரிக்கப்பட்டிருந்தது. சீருடல் பயிற்சியுடன் முகாம் தொடங்கியது. காலை சிற்றுண்டி, பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் அக்கறையுடன் செயல்படுதல் என்ற நன்னெறிக்கு ஒரு பயிற்சியாக இருந்தது. கதைகூறுதல் நிகழ்ச்சியும் இணைந்திருந்தது. அதனைத்தொடர்ந்து மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி, 'கலை மற்றும் கைவண்ணம்' நிகழ்ச்சி இருந்தது. மதிய உணவுக்குப்பின், பொம்மலாட்டமும் ஒரு திரைப்படமும் இருந்தன. மாலை நேரங்கள், ஆசிரம வளாகத்தை தூய்மை செய்தல், தியானக் கூடத்தின் நாற்காலிகளைச் சுத்தம் செய்தல், செடிகளுக்கு நீர் ஊற்றுதல் ஆகிய தன்னார்வ பணிகளில் கழிந்தது. குழந்தைகள் அற்புதமான நேர்மையுணர்வை வெளிப்படுத்தி, பணிபுரிவதில் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

தன்னார்வலர்கள் கால்பந்து, கிரிக்கெட் மற்றும் கயிறு இழுத்தல் ஆகிய வெளிப்புற விளையாட்டுக்களை ஏற்பாடு செய்திருந்தனர். மாலையில் அவர்கள் சீருடல் பயிற்சி செய்து, கைமொழிச்சொல் விளையாடி மகிழ்ந்தனர். அவர்களின் நாட்குறிப்பு எழுதுதல் மற்றும் இரவு பிரார்த்தனையுடன், அந்த நாள் நிறைவு பெற்றது.

மறுநாள் காலை சிற்றுண்டிக்குப்பிறகு சீருடல் பயிற்சி இருந்தது. அப்யாசிகள் ஞாயிறு சத்சங்கத்திற்கு சென்றபோது, குழந்தைகள், குழந்தைகள் மையத்தை அலங்கரித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் பகிர்ந்து கொள்ளல், அக்கறை கொள்ளல், குழு உணர்வு, ஒற்றுமை, கடின உழைப்பு, இயற்கைக்கு நம் பொறுப்பு, இணைந்து வாழ்தல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவைகளைப்பற்றி கலந்துரையாடி, அவற்றின் மதிப்பை உணர்ந்தனர். குழந்தைகள் அடுத்த கோடை முகாமுக்கான ஆவல் மிக்க எதிர்பார்ப்புடன் வீட்டிற்கு திரும்பினர்.



## செய்தித் துணுக்குகள்



### கோயம்புத்தூர் , தமிழ் நாடு

ஏப்ரல் 5 ஆம் தேதி கோயம்புத்தூர் விமான நிலயத்திற்கு அருகில், சுற்றுப்புறத்திலுள்ள சுமார் 40 அப்யாசிகளுக்கு வசதியாக இருக்க, துணை மையம் ஒன்று துவங்கப்பட்டது. மண்டலப் பொறுப்பாளர், சகோ. T.V.V.ராவ் அவர்களால் நடத்தப்பட்ட, காலை 7.30 மணி சத்சங்கத்தில், 10 புதிய அப்யாசிகளும், ஏற்கனவே உள்ள 80 அப்யாசி களும் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து இருந்த ஒரு வினா-விடைப் பகுதியில், கோயம்புத்தூர் மையப் பொறுப்பாளர் சகோ.T.S. மணி யம் மற்றும் மண்டலப் பொறுப்பாளரும், பங்கேற்றவர்களின் கேள்வி களுக்குப் பதில் அளித்தனர். அனைவரும் தங்கள் அனுபவங்களைப் பகி ர்ந்து கொண்டபின், சத்சங்கம் மற்றும் மதிய உணவுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

### பில்வாரா, ராஜஸ்தான்



மார்ச் 8 அன்று, சத்சங்கத்திற்குப்பின், "வாழ்க்கையோடு ஓர் ஓட்டப் பந்தயம்" என்ற தலைப்பில் ஒரு கருத்துரை வழங்கப்பட்டது. அதி ல் அப்யாசிகளின் நண்பர்களும் உறவினர்களும் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள், வாழ்க்கையைப்பற்றிய 10 கேள்விகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அது ஒரு பயணமா? அல்லது ஓட்டப் பந்தயமா? வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயம் என்றால் நாம் எதற்காக ஓடிக்கொண்டிருக்கிறோம்? நாம் எல்லோரும் ஒரே திசையில் தான் ஓடிக்கொண்டிருக்கிறோமா? நாம் நம் திசையைப் பற்றிய விவரமறிய ஏன் இடைநி றுத்துவதில்லை? ஒரு கலந்துரையாடலில், பங்கேற்பாளர்களிடம், அவர்களை மிகவும் பாதித்த கேள்வி எது என்று கேட்கப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில், அவர்கள் ஒரு கருத்துக்கணிப்பு படிவத்தை பூர்த்தி செய்தனர். அனைவரும் நிகழ்ச்சியை மிகவும் விரும்பி, இதே போன்று நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுகோள் வி டுத்தனர். இந்நிகழ்ச்சி, அவர்களை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டி, அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

### மங்களூர், கர்நாடகா



பிப்ரவரி 22 அன்று, CREST இயக்குனர் சகோ.மோஹன்தாஸ், "பக்தியை எப்படி வளர்த்துக்கொள்வது" என்பது பற்றிய ஒரு பயி லரங்கை நடத்தினார். அதில் மங்களூர் மற்றும் அருகாமை மையங்களிலிருந்து, 69 அப்யாசிகள் பங்கேற்றனர். அவர், மாஸ்டரி ன் மீதான் பக்தியின் முக்கியத்துவம், மற்றும் நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கான அதன் அவசியம் பற்றி விளக்கினார். அவ்வி தமான பக்தியை வளர்த்துக்கொள்வது எப்படி என்றும், அதை வளர்த்துக் கொள்ள இருக்கும் தடைகளை பற்றியும், அப்யாசிகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மதிய உணவிற்குப் பின், இந்த தலைப்பில் ஒரு குழு விவாதம் நடைபெற்றது. அனைத்துக் கருத்துக்களையும் தொகுத்து வழங்கிய சகோ. மோஹன்தாஸ், ஒவ்வொரு அப்யாசியும் விவாதிக்கப்பட்ட விஷயங்களில், குறைந்தது மூன்று அல்லது நான்கைச் செயல்பாட்டில் கொண்டு வந்தால் அவன்/அவள் நிச்சயமாக பக்தியை வளர்த்துக் கொண்டு, ஆன்மீகத்தில் முன்னேற முடியும் என்று சொன்னார். ஒரு வினா- விடை பகுதி சில சந்தேகங்களைத் தெளி வாக்கியது. அப்யாசிகள், பக்தி அதிகரிக்க, தாங்களே சுயமாக என்ன செய்து கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி, 10 நிமிடங்களுக்கு உள்ளாய்வு செய்தபின், ஒவ்வொவரும் ஒரு கருத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மாலை 4 மணி சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2015 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.